**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW8**

Deposition of the witness of **LW13**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.காசி | District | இராணிப்பேட்டை |
| Husband/ Father Name | திரு.குப்புசாமி | Occupation | விவசாயம் |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 60 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 7229 3070 7799 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரி கிரிவாசன் என்பவரை மட்டும் எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன நாகேந்திரன் மற்றும் காயம்பட்ட ரகுவரன் ஆகிய இருவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் மாரியம்மன் கோவில் திருவிழா நடந்தது. நான் இரவு 8.00 மணிக்கு விவசாய நிலத்திற்கு சென்றுவிட்டு, இரவு 10.00 மணிக்கு வீட்டிற்கு திரும்ப வந்தேன். அப்போது எங்கள் ஊர்காரர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். நான் விசாரித்த போது திருவிழா கூட்டத்தில் சண்டை நடந்ததாகவும், அந்த சண்டையில் நாகேந்திரனை யாரோ குத்திவிட்டதாகவும், ரகுவரனுக்கு காயம் ஏற்பட்டதாகவும், அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் கேள்விப்பட்டேன். அந்த திருவிழாவில் எதனால் சண்டை நடந்தது என்றும், யார் நாகேந்திரன் மற்றும் ரகுவரனை குத்தியது என்றும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு, சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது 27.07.2021-ம் தேதி நடைபெற்ற திருவிழாவின் போது இரவு 8.00 மணிக்கு சாமி ஊர்வலம் நடந்ததாகவும், அந்த ஊர்வலத்தில் நானும், என் ஊர்காரர்களும் கலந்துகொண்டு நடந்து வந்ததாகவும், அப்போது எங்கள் ஊரை சேர்ந்த கிரிவாசனுடன் இருந்த 4 நபர்கள் சாமி ஊர்வலத்தில் நடனம் ஆடியதால் எங்கள் ஊரை சேர்ந்த ரகுவரன், நாகேந்திரன் ஆகிய இருவரும் அவர்களை பார்த்து நடனம் ஆட கூடாது என்று சொன்னதாகவும், அதற்கு அந்த நபர்கள் நடனம் ஆடுவதை நிறுத்திவிட்டதாகவும், அதன் பிறகு கிரிவாசன் ரகுவரனிடம் நீங்கள் என்னடா செல்வது போங்கடா என்று சொன்ன போது ஊர்காரர்கள் கிரிவாசனிடம் வெளியாட்கள் நடனம் ஆட கூடாது என்று சொல்லிவிட்டு வந்ததாகவும், அன்று இரவு 9.00 மணிக்கு சாமி ஊர்வலம் பேருந்து நிறுத்ததிடம் சென்ற போது கிரிவாசன் அவருடைய நண்பர்கள் ஹரிஷ், ஹேமபிரசாத், அன்பரசன், கார்த்தி ஆகியோர் ரகுவரனை பார்த்து எங்களையாட நடனம் ஆடக் கூடாது என சொல்கிறீர்கள் என்று சொன்ன போது ரகுவரனும், நாகேந்திரனும் பேருந்து நிலையம் உள்ளே சென்றதாகவும், அப்போது கிரிவாசன் ரகுவரனை பார்த்து இவன் உயிரோடு இருக்க கூடாது ஊர்காரர்கள் முன்னாடி என் மானத்தை வாங்கிவிட்டான் இவனை போட்டு தள்ளுங்கடா என்று சொன்னவுடன் ஹேமபிரசாத் என்பவர் தீடீரென பேருந்து நிலையத்திலுள்ள நிழற்குடை உள்ளே இருந்த பிராந்தி பாட்டிலை உடைத்து ரகுவரனை குத்த வந்த போது நாகேந்திரன் தடுக்க போனதாகவும், அப்போது ஹேமபிரசாத் அவர் கையில் வைத்திருந்த உடைந்த பிராந்தி பாட்டிலால் நாகேந்திரனின் கழுத்தில் ஓங்கி குத்தியதாகவும், கிரிவாசன் அவனையும் குத்துங்கடா என்று ரகுவரனை பார்த்து சொன்னவுடன் கார்த்தி என்பவர் அங்கிருந்த வேறு பிராந்தி பாட்டிலை உடைத்து ரகுவரனின் கையில் குத்தியதால் இடது கை மணிக்கட்டில் ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், ரகுவரனை அவருடைய தந்தை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அதே நேரத்தில் காயம்பட்ட நாகேந்திரனையும் எஸ்.எம்.எஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், நாகேந்திரன் இறந்துவிட்டதாக அங்கு பரிசோதித்த மருத்துவர் கூறியதாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.